DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>(Chapter.. | ... | DEPOSITION OF WITNESS |
| Preliminary Register | ... | Case No. S.C.No.260/2024 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W.6<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | பிரவீன் |
| Father's Name | த/பெ.சந்தனகுமார் |
| Village | அத்திமரப்பட்டி |
| Taluk | |
| Age | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2026.

<u>(1ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2 முதல் 6 எதிரிகள் ஆஜர்.)</u>

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது முத்தையாபுரம் அத்திரமரப்பட்டி மேற்கில் குடியிருந்து வருகிறேன். நான் பெட்ரோல் பல்கில் மேனேஜராக வேலை பார்த்து வருகிறேன்.சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு நான் முத்தையாபுரம் காவல் நிலையம் சென்றபோது போலிசார் என்னிடம் ஒரு கையெழுத்து மட்டும் பெற்றுக்கொண்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் 2 வதாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.7** ஆகும். அத்தாட்சியில் உள்ள எனது கையெழுத்து **அ.சா.ஆ.8** ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பில் அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலிசார் விசாரணையில் 20.04.2024ம் தேதி காலை 06.00 மணியளவில் நானும் பாரத் என்பவரும்பொட்டல்காடு விலக்கு அருகில் உள்ள காந்தி டீக்கடை அருகில் இருந்தபோது அங்கு வந்த முத்தையாபுரம் காவல் நிலைய ஆய்வாளர் எங்கள் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும் பின்னர் காலை 07.00 மணிக்கு சம்பவ இடத்திலிருந்த உடைந்த கண்ணாடி துண்டுகளை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார்கள் என்றும் பார்வைமகஜர் அத்தாட்சியில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

**ஒம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**